**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நஷ்ட ஈடு தர வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கொள்கையளவில் ஏற்று இருக்கிறோம். அப்படி அந்த நஷ்ட ஈட்டைத் தருவது என்பதைப்பற்றி பின்னால் தீர்மானித்துக்கொள்ளலாம், நிலத்தைக் கைப்பற்றியபிறகு என்றிருக்கிறோம்.

**கைவினைப்பொருள் தொழிலாளர்கள்**

*187 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் கைவினைப் பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் மேன்மையடையும் விதத்தில் தீவிர திட்டமேதும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, புகழ்பெற்ற நம் தமிழகத்தின் கைவினைப் பொருள்களைச் செய்யும் தன்மை மக்களிடத்திலே பாதுகாக்கப் படாமல் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, அதற்காக ஒரு தீவிரத் திட்டத்தை தயாரித்தால் ஒழிய, அதாவது அந்தக் கைவினைப் பொருள்கள் தயாரிப்பது வளர்ச்சியடையாது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள். 'அதாவது' 'அதாவது' என்று சொல்கிறீர்களே !

**திரு. கே. எ. வகாப் :** அப்படிப்பட்ட தீவிரத்திட்டத்தை அரசு செயல் படுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பெரும்பாலும் இந்த ஹேண்டிகிராப்ட்ஸ் ஆர்டிகிள்ஸ் பொறுத்தவரையில் கிராமங்களில் பரவலாக இது உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களுக்குப் போதிய அளவு கடன் வசதி செய்து கொடுக்கின்ற திட்டங்களை நாம் உருவாக்கிட வேண்டும். அதற்கடுத்த படியாக, உற்பத்தி செய்யப்படுபவைகளுக்கு, விற்பனை செய்வதற்கு சந்தை இல்லாமல் அல்லல் படுகிறார்கள். இந்த இரண்டையும் கவனித்து முடிவு செய்து இப்பொழுது பல மாவட்டங்களில் 9 டிபார்ட்மெண்டல் எம்போரியம் வைத்துக்கொடுக்க முடிவு செய்து வைத்திருக்கிறோம். இதைக் கொஞ்சம் மாற்றி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் ஒரு எம்போரியம் அமைத்து அதன்மூலம், மாவட்டத்தில் உள்ள உற்பத்தி செய்பவர்களோடு தொடர்புகொண்டு கடன் வசதிகள் செய்து கொடுத்து, உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனைக்கும் வகை செய்யும் முறையில் தகுந்த திட்டமாக்குகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லியாகிவிட்டது. இல்லாததற்கு இவ்வளவு கேள்விகளா ?

1972 சனவரி 31]

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, எம்போரியங்கள் மூலம் இந்த கைவினைப் பொருள்களுக்கு உதவி செய்வதுபற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்பொழுது கிராமத்திலேயிருக்கும் இம்மாதிரி தொழில் செய்பவர்கள் ஆங்காங்குள்ள கூட்டுறவுச்சங்கங்களில் கடன்பெற முடியவில்லை. அதற்குக் காரணம் அது விவசாயிகளுக்கு மட்டும் கொடுக்கிறது. இவர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கடன் அளித்தால் அவர்கள் செய்யும் பொருள்களைச் செய்து பிழைப்புக்கு வழி ஏற்படும். அதற்கு ஆவன அமைச்சரவர்கள் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் யாரோ சொன்ன தகவலைத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில்தான் இப்படிப்பட்ட கைவினை இயக்குநர் கூட்டுறவுச் சங்கங்களை வைத்து நடத்துகிறார்கள். இதற்காகப் பணம் கொடுக்க, நம்முடைய ஸ்டேட் கோவாப்பரேடிவ் வங்கியின்மூலம் கடன் கொடுக்கப்பட வேண்டுமென்ற புதிய ஆணை ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின் பேரில் பிறப்பித்திருக்கிறோம். அதற்கு முன் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பேங்குகள் நம் தமிழகத்தில் செயல்பட்டு ஏற்கனவே இருந்து வருகின்றன.

## வண்ணப்புடவைகள்

*188 வினா—திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலர் சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது அமலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) கலர் நூலை உபயோகப் படுத்தி கோடு அல்லது கட்டம் போட்ட ரகமும் அல்லது 2½ அங்குலத்துக்கும் அதிகமான அகலக் கரை கொண்ட கலர் சேலைகளும் கைத்தறிக்கு ஒதுக்கி பம்பாய் துணிநூல் ஆணையர் அவர்களால் பஞ்சு துணி கட்டுப்பாடு சட்டம், 1948-ன் கீழ் உத்திரவிடப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கலர்ப் புடவைகளை இம்மாதிரி கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று சொன்னதற்குப் பின்னும் விசைத் தறியிலும், இங்கே மில்களிலும் கூட அம்மாதிரி உற்பத்தி செய்யப்படுவதைத் தடுக்க மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசாங்கத்தின் ஆணையின்படி பொதுவாக கலர்ச் சேலைகளைத் தடுப்பது என்று இல்லாமல் அதற்கு ஒரு விதி போட்டு 2½ அங்குல பார்டர் என்று போட்டிருக்கிறார்கள், கோடு அல்லது கட்டம் போட்ட ரகம் என்ற வார்த்தைகளைப் புகுத்தியிருக்கிறார்கள். பவர்லூம்ஸைப் பொறுத்தவரை ஐந்து விசைத்தறிகளை வைத்திருப்பவர்களுக்குச் சலுகை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆணையைப் போட்டு விட்டு விதிவிலக்குகளும் ஏராளமாக இருக்கிற காரணத்தால் இது சரிவர இந்திய நாட்டிலே எங்கும் அமல் நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆணை மீறப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய மாநிலத்தை மட்டும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்காமல்